அ.வ.எண்: 3/2025 நாள்: 10.03.2026

வா.சா.1 –

சொர்ணவள்ளி

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**2–ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் அது என்னுடைய சொந்த சொத்து தான், என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது. தாவா சொத்து எனக்கு விவரம் தெரிந்த காலம்முதல் எனது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. தாவா சொத்திற்கு என் பெயரில் வரி செலுத்தப்பட்டுள்ளதா என்றால் செலுத்தப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கான யூ.டி.ஆர். பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில்தான் உள்ளது. தாவா சொத்திற்கான 10(1) நகல் என் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ராமலிங்கம் எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால் அவர் எனக்கு உறவினர் இல்லை. நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து என்னுடையது என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. தாவா சொத்து தற்போது வருவாய்த்துறை ஆவணங்களில் யார் பெயரில் உள்ளது என்றால், என் பெயரில் தான் உள்ளது. 1ம்

பிரதிவாதி ராமலிங்கத்தை எதற்காக வழக்கில் தரப்பினராக சேர்த்து உள்ளேன் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. தாவாசொத்தை முறையான ஆவணங்களின் மூலமாகத்தான் 1ம் பிரதிவாதிக்கு 2ஆம் பிரதிவாதி அலுவலகத்தில் வைத்து பதிவு செய்து கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. தாவா வழக்கிற்கு 2ஆம் பிரதிவாதி அவசியமற்ற தரப்பினர் என்றும் தேவை இல்லாமல் அவரை வழக்கில் சேர்த்து உள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதி முறையான ஆவணங்களை பரிசீலனை செய்த பின்பு தான் மேற்படி ஆவணத்தை பதிவு செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதியை பொருத்தவரை நான் கேட்டுள்ள பரிகாரம் எதுவும் கிடைக்கதக்கதல்ல என்றும் இரண்டாம் பிரதிவாதியை பொறுத்து தாவா வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.10 15:51:41 +0530